Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, JULY 22 2025

செவ்வாய்க்கிழமை ஜூலை 22, 2025 | ஒளி: 10 கதிர் 288 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

நிலையான பொருளாதாரத்துடன் உலகளவில் முன்னோக்கிச் செல்வதற்கு

# இலங்கைக்கு IMF ஆதரவு

**2026 வரவு- செலவுத் திட்டத்தில் நாட்டு மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி நினைவு கூர்ந்தார்**

**நாட்டுக்குக் கிடைக்கும் பொருளாதார வளர்ச்சியின் அனைத்து பயன்களையும் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாக சர்வதேச நாணய நிதியத்திடம் அரசாங்கம் உறுதி**

சர்வதேச நாணய நிதியம் மற்றும் இலங்கைக்கு இடையிலான நீடிக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான எதிர்கால முன்னெடுப்புகள் குறித்து ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கு இடையே ஜனாதிபதி அலுவலகத்தில் திங்கட்கிழம (21) கலந்துரையாடல் நடைபெற்றது.

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் இலங்கை பொருளாதார ஸ்திரத்தன்மை எட்டுபட்டுள்ளதால், அந்த வலுவான அடித்தளத்தில் பொருளாதார வளர்ச்சியை அடைவதன் மூலமும் புதிய பொருளாதார வாய்ப்புகளைப் பெறுவதன் மூலமும் இலங்கையை சர்வதேச மட்டத்திற்குக் கொண்டு செல்லும் திட்டம் துரிதப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.


இலங்கை எதிர்கொள்ளும் தற்போதைய பொருளாதார சவால்கள் குறித்து சர்வதேச நாணய





நிதியப் பிரதிநிதிகளுக்கு விளக்கிய ஜனாதிபதி, அந்த சவால்களுக்கு மத்தியிலும் 2026 வரவு செலவுத் திட்டத்தில் நாட்டு மக்களுக்குத் தேவையான நிவாரணங்களை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் நினைவு கூர்ந்தார். தொடர்ச்சி P2

# “ஏப்ரல் 2026 e-NIC”



மின்னணு தேசிய அடையாள அட்டைகள் (e-NIC) ஏப்ரல் 2026 க்குள் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்தார்.

டிஜிட்டல் ஐடி அமைப்பை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டு, ஐடி செயல்முறையை டிஜிட்டல் மயமாக்கும் திட்டம் 2012 இல் தொடங்கப்பட்டது என்று அவர் கூறினார்.




முன்னாள் எம்.பிக்களுக்கு ஆதங்கம்

## ஜெனீவா செல்கிறது ஓய்வூதிய விவகாரம்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியம் இரத்து செய்வதை எதிர்த்து ஓய்வு பெற்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் சங்கம், ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பாராளுமன்றங்களுக்கு இடையேயான ஒன்றியத்தில் முறைப்பாடு செய்ய முடிவு எடுத்துள்ளன. தொடர்ச்சி P2

## “நிலந்தவுக்கு மரண தண்டனை விதிப்பதை விரும்பவில்லை”

### கத்தோலிக்க திருச்சபை பாதிரியார் சிரில் காமினி



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பொலிஸ் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள பிரதிபொலிஸ்மா அதிபர் நிலாந்த ஜெயவர்த்தனவிற்கு மரணதண்டனை வழங்கவேண்டும் என்பது கத்தோலிக்க திருச்சபையின் நிலைப்பாடில்லை என கொழும்பு மறைமாவட்டத்திற்கான தகவல்தொடர் இயக்குநர் அருட்தந்தை சிரில் காமினி பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார். தொடர்ச்சி P2



நல்லூர் கொடிச்சீலைக்கான

## காளாஞ்சி கையளிப்பு

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு, திங்கட்கிழமை(21) காலை இடம்பெற்றது. நிதர்ஷன் வினோத்

மேலதிக படங்கள்:பக்கம் 5 இல்

மஹிந்தானந்த உள்ளிட்ட

## மூவருக்கும் பிணை





**20 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை மேல் நீதிமன்ற நிரந்தர விசாரணை நீதிமன்றத்தால் ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ளது**

சர்ச்சைக்குரிய கரம் பலகைகள் பரிவர்த்தனை தொடர்பான மற்றொரு வழக்கு தொடர்பாக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட பின்னர், முன்னாள் விளையாட்டு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, முன்னாள் லங்கா சதொச தலைவர் நளின் பெர்னாண்டோ மற்றும் இலங்கை இராணுவத்தின் முன்னாள் தலைமைத் தளபதி (ஓய்வு) மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி ஆகியோருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் திங்கட்கிழமை (21) பிணை வழங்கியது.

சட்டமா அதிபரால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, தொடர்ச்சி P2




## “வலி வடக்கு காணி உரிமம் இல்லாது போகும் அபாயம்”

நிதர்ஷன் வினோத்

வலி வடக்கு காணி உரிமம் தொடர்பாக இலங்கை அரசால் 2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்தமானி உடனடியாக ரத்து செய்யப்பட்டு மக்களின் காணி நிலங்கள் மக்களுக்குரியது என்பதை உறுதி செய்ய வேண்டும் என வலியுறுத்திய மனித உரிமை செயற்பாட்டாளரும் குறித்த விடையத்தின் ஏற்பாட்டாளருமான யே.யாட்சன் பிகிறாடோ- மெசிடோ இல்லையேல் இதுவரை விடுவிக்கப்பட நிலங்களும் சட்டபூர்வமாக இல்லாது போகும் அபாயம் உள்ளதாகவும் எச்சரித்துள்ளார். தொடர்ச்சி P2

## குருக்கள்மடம் மனிதப் புதைகுழி வழக்கு ஒத்திவைப்பு

எம். எஸ். எம். நூர்தீன்



குருக்கள்மடம் மனிதப் புதைகுழி தோண்டப்படல் வேண்டும் என்ற வழக்கு ஆகஸ்ட் 25ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, களுவாஞ்சிகுடி நீதவான் நீதிமள்றத்தில், திங்கட்கிழமை (21) மீள விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் மற்றும் சட்டமா அதிபருக்கு; 21ம் திகதி திங்கட்கிழமை களுவாஞ்சிகுடி நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு களுவாஞ்சிகுடி நீதிமன்றம் இந்த வழக்கின் கடந்த தவனையின் போது, கட்டளை பிறப்பித்திருந்தது.

எனினும் இந்த வழக்கு திங்கட்கிழகமை (21) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சட்டமா அதிபரை பிரதி நிதித்துவப்படுத்தி எவரும் ஆஜராகி இருக்க வில்லை. எனினும், காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்திலிருந்து இரண்டு சட்டத்தரணிகள் ஆஜாராகி சமர்ப்பணங்களை முன் வைத்தனர்.

அவர்கள், களுவாஞ்சிகுடி நீதமன்றத்துக்கு காணாமல் போனோர் அலுவலகத்தினால் ஒரு விரிவான கடிதத்தினை ஏற்கனவே தொடர்ச்சி P2

## மூளாய் மோதலில் மோட்டார் சைக்கிள் தீக்கிரை

வட்டுக்கோட்டை மூளாய் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (20) இரண்டு குழுக்களுக்கு இடையே நடைபெற்ற மோதலில் மோட்டார் சைக்கிள் ஒன்று தீக்கிரை ஆக்கப்பட்டுள்ளது.

தனி நபர்களுக்கிடையே தாக்குதல் சம்பவம் சனிக்கிழமை (19) இடம்பெற்றது. இந்த பிரச்சினையானது பொலிஸ் நிலையம் வரை சென்ற பின்னர். இரண்டு தனிநபர்களும் ஞாயிற்றுக்கிழமை (20) தாக்குதலில் ஈடுபட்டனர்.

இதன்போது மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு தீ வைத்து எரிக்கப்பட்டதுடன் மற்றொரு மோட்டார் சைக்கிள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2



## சம்பூரில் மனித எச்சங்கள் மீட்பு

எஸ்.கீதபொன்கலன்



சம்பூர் கடற்கரையினை அண்மித்த சிறுவர் விளையாட்டு பூங்காவிற்கு அருகில் மனித மண்டையோடு மற்றும் மனித எலும்பு எச்சங்கள் ஞாயிற்றுக்கிழமை (20) கண்டுபிடிக்க ப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

நிலையான பொருளாதாரத்துடன் உலகளவில் முன்னோக்கிச் செல்வதற்கு

# இலங்கைக்கு IMF ஆதரவு

நாட்டில் முதலீட்டுக்கு ஏற்ற சூழலை உருவாக்குவதன் மூலம் முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில் சுங்கவரிச் சலுகைகள் உள்ளிட்ட வசதிகளை வழங்குவது குறித்தும் இதன் போது கலந்துரையாடப்பட்டது. இலங்கை பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மை மற்றும் தொடர்ச்சியைப் பேணுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவு இலங்கைக்கு தொடர்ந்து கிடைக்கும் என்று ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம் இதுவரை இலங்கைக்கு அளித்த ஆதரவிற்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க, நாட்டுக்குக் கிடைக்கும் பொருளாதார வளர்ச்சியின் அனைத்து பயன்களையும் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாக வலியுறுத்தினார்.

இலங்கையை பொருளாதார ரீதியாக முன்னோக்கி கொண்டு செல்வதில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்ட உறுதிப்பாட்டைப் பாராட்டிய சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள், பொருளாதாரத்தின் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கும் இலங்கையை உலகளவில் முன்னோக்கி கொண்டு செல்வதற்கும் தேவையான ஆதரவை வழங்கவும் உடன்பாடு தெரிவித்தனர்.

சர்வதேச நாணய நிதியத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி, இலங்கைக்கான தூதுக்குழுவின் பிரதானி இவான் பாபர்ஜயோஜியோ(Evan Papageorgiou), சந்தேஷ் துங்கானா(Sandesh Dhungana) , உர்சுலா விரியாடினாடா(Ursula Wiriadinata), தினார் பிரிஹார்டினி( Dinar Prihardini), சம்சன் குவாலிங்கனா( Samson Kwalingana), ஓஸ்லெம் அய்டின்(Ozlem Aydin ) மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் வதிவிட பிரதிநிதிகளான மார்த்தா வோல்டெமிகேல்(Martha Woldemichael)மற்றும் மானவி அபேவிக்ரம ஆகியோரும் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.

இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, தொழில் மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜெயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க,இலங்கை மத்திய வங்கி ஆளுநர் பி. நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும, ஜனாதிபதியின் சிரேஸ்ட மேலதிகச் செயலாளர் ரஸ்ஸல் அப்போன்சு, ஜனாதிபதியின் சிரேஸ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ, நிதிக் கொள்கைத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி எம்.கே.சி. சேனநாயக்க, இலங்கை மத்திய வங்கி சிரேஸ்ட பிரதி ஆளுநர் கே.எம்.ஏ.என். தவுலகல, நிறைவேற்றுப் பணிப்பாளர் பேராசிரியர் பி.கே. ஜி. ஹரிச்சந்திர, நிதிக் கொள்கை சபையின் செயலாளர் கலாநிதி சி. அமரசேகர, பொருளாதார ஆராய்ச்சி பணிப்பாளர் ஜே.எஸ். ஜெகஜீவன் ஆகியோர் பங்கேற்றனர்.

## மூவருக்கும் பிணை

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன, மூன்று பிரதிவாதிகளையும் தலா 100,000 ரூபாய் ரொக்கப் பிணையிலும், பிரதிவாதிக்கு 2.5 மில்லியன் ரூபாய் வீதம் இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுவிக்க உத்தரவிட்டார்.

இருப்பினும், அதே சம்பவத்தின் அடிப்படையில் இலஞ்சம் மற்றும் ஊழல் சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவால் தாக்கல் செய்யப்பட்ட தனி வழக்கில், மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் நலின் பெர்னாண்டோ ஆகியோருக்கு மேல் நீதிமன்ற நிரந்தர விசாரணை நீதிமன்றத்தால் 20 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் சார்பாக முன்னிலையான பாதுகாப்பு சட்டத்தரணி, தற்போதைய வழக்கில் குற்றச்சாட்டுகளின் பராமரிக்கும் தன்மையை எதிர்த்து, ஆரம்ப ஆட்சேபனைகளை எழுப்ப உள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

ஆரம்ப ஆட்சேபனைகளை பரிசீலிக்க செப்டம்பர் 4 ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நளின் பெர்னாண்டோ சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சய் ராஜரத்தினம், மகிந்தானந்த அளுத்கமகே சார்பாக சட்டத்தரணி நளின் லது ஹெட்டியும், ஜெனரல் மல்லவாராச்சிக்காக சட்டத்தரணி சஞ்சய மரம்பேவுடன் சட்டத்தரணி சாலிய பீரிஸும், கீத் கருணாரத்ன மற்றும் பசன் கருணாரத்னவும் ஆஜராகினர்.

## மூளாய் மோதலில் மோட்டார் சைக்கிள் தீக்கிரை

சம்பவம் தொடர்பில் சம்பவ இடத்திற்கு விரைந்த வட்டுக்கோட்டை பொலிஸார் மீது கல் வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து பொலிஸார் வானத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். அத்துடன் வன்முறையில் ஈடுபட்ட இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இதனால் அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.

## குருக்கள்மடம் மனிதப் புதைகுழி வழக்கு ஒத்திவைப்பு

அனுப்பியிருந்ததாகவும் குருக்கள் மடம் மனித புதை குழி தோண்ட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருப்பதாகவும் அதே நிலைப்பாட்டியிலேயே தற்போதும் இருப்பதாகவும் கூறினார்கள்.
இவற்றை செவிமடுத்த நீதிபதி ஏற்கனவே திட்ட வரைபு ஒன்று சட்ட வைத்திய அதிகாரியினால் நீதி மன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது என்றும் சுட்டிக்காட்டினார்..

அது 2020ம் ஆண்டு சமர்பிக்கப்பட்டதால் கால மாற்றத்தினால் அதை மீளாய்வு செய்து மீள அந்த திட்ட வரைபை நீதிமன்றத்துக்கு அடுத்த தவனையின் போது சமர்ப்பிக்குமாறு சட்ட வைத்திய அதிகாரிக்கு நீதவான் கட்டளையிட்டார்.

அத்துடன் அடுத்த தவனையான 25.08.2025ம் திகதி சட்டமா அதிபரை ஆஜராகுமாறும் கட்டளையிட்ட நீதவான் இந்த வழக்கை அந்த திகதிக்கு ஒத்தி வைத்தார்.

குறித்த இவ் வழக்கில் முறைப்பாட்டாளரான அப்துல் மஜீத் அப்துர் ரஊப் நீதிமன்றத்தில் பிரசன்னமாகி இருந்ததுடன் அவரின் சார்பில் குரல்கள் இயக்கத்தின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்தனர்.

12.071990 ஆந் திகதி புனித ஹஜ் கடமையை நிறைவு செய்து வீடு திரும்பிய காத்தான்குடியைச் சேர்ந்த ஹஜ் யாத்திரிகர்கள் மற்றும் வியாபாரிகள் கல்முனை மட்டக்களப்பு வீதியில் குருக்கள்மடம் எனும் இடத்தில் கடத்திக் காணாமலாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு புதைக்கப்படட்டமை தொடர்பில் பாதிக்கப்பட்ட அப்துல் மஜீத் அப்துல் ரவூப் என்பவரால் களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதனடிப்படையில் கடந்த 2014 ஆம் ஆண்டு களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்றில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு இடம் பெற்று சந்தேகத்திற்கிடமான மனிதப்புதைகுழி அமைந்துள்ளதாக நியாயமாக சந்தேகிக்கப்படும் இடத்தை தோண்டுவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை மேற்கொண்டு மன்றுக்கு அறிக்கையிடுமாறு உரிய அரச திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு கட்டளையாக்கி இருந்த நிலையில் 04.10.2020ல் சட்டமா அதிபரினால் களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்கு வழங்கப்பட்ட ஆலோசனைக்கு அமைவாக குறித்த வழக்கானது கிடப்பிலிடப்பட்டிருந்தது.

இப்பின்னணியிலேயே இவ்வழக்கின் முறைப்பாட்டாளரான அப்துல் மஜீத் அபதுர் ரவூப் என்பவரின் அறிவுறுத்தலுக்கு அமைவாக 11.07.2025ந் திகதியாகிய வெள்ளிக்கிழமை குரல்கள் இயக்கத்தின் சட்டத்தரணியால் களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரத்தை சமர்ப்பித்தனர். அந்த வழக்கானது திறந்த மன்றில் மீள எடுத்துக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## "நிலந்தவுக்கு மரண தண்டனை விதிப்பதை விரும்பவில்லை"

இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் மக்கள் தொடர்பு இயக்குநர் அருட்தந்தை ஜூட் கிரிசாந்த, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பொலிஸ் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ள பிரதிபொலிஸ்மா அதிபர் நிலாந்த ஜெயவர்த்தனவிற்கு மரணதண்டனை வழங்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளமை குறித்து கருத்து தெரிவிக்கையில் அருட்தந்தை சிரில்காமினி பெர்ணாண்டோ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தனது தனிப்பட்ட கருத்தினையே இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் மக்கள் தொடர்பு இயக்குநர் அருட்தந்தை ஜூட் கிரிசாந்த, ஞாயிற்றுக்கிழமை (20) தெரிவித்ததாக குறிப்பிட்டார் என தெரிவித்துள்ள சிரில் காமினி பெர்ணாண்டோ இந்த விடயம் தொடர்பில் எந்த பிரச்சினையும் இல்லை என தெரிவித்துள்ளார்.

இலங்கை கத்தோலிக்க திருச்சபையும்,உலகளாவிய திருச்சபையும் மரணதண்டனையை ஏற்றுக்கொள்வதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையிலேயே நிலாந்த ஜெயவர்த்தன பணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார் என தெரிவித்துள்ள சிறில் காமினி பெர்ணாண்டோ ஜனாதிபதி ஆணைக்குழுவின் அனைத்து பரிந்துரைகளையும் நடைமுறைப்படுத்தவேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம், என குறிப்பிட்டுள்ளார்

> **கர்தினாலின் விருப்பம் அவர் பெயர் எதனையும் குறிப்பிடவில்லை என அருட்தந்தை சிறில் காமினி பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்**

உயிர்த்த ஞாயிறுதாக்குதல் குறித்த விசாரணையின் மூலம் மேலும் பல விடயங்கள் தெரியவரும் என எதிர்பார்க்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.

சிஐடியின் இயக்குநராக ஷானி அபயசேகரவையும்,பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக ரவிசெனிவிரட்னவையும் நியமிக்கவேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை 2020இல் பதவிஇடமாற்றம் செய்யப்பட்ட அதிகாரிகளை மீண்டும் பணிக்கு அமர்த்தவேண்டும்,என்பதே கர்தினாலின் விருப்பம் அவர் பெயர் எதனையும் குறிப்பிடவில்லை என அருட்தந்தை சிறில் காமினி பெர்ணாண்டோ தெரிவித்துள்ளார்.

## சம்பூரில் மனித எச்சங்கள் மீட்பு

கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினர் இப்பகுதியில் கண்ணிவெடிகள் உள்ளனவா என அறிவதற்காக ஆரம்ப அகழ்வில் ஈடுபட்ட போது மனித எலும்பு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனை அடுத்து சம்பூர் பொலிஸ் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து இவ்விடயம் உடனடியாக பொலிஸார் மூலம் மூதூர் நீதிவான் நீதிமன்றுக்கு தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், சம்பவ இடத்திற்கு வருகை தந்த மூதூர் பதில் நீதவான் எம்.எம்.நஸ்லீம் அகழ்வு நடைபெற்ற இடத்தை பார்வையிட்டார்.பின்னர் அகழ்வு வேலைகளை தற்காலிகமாக நிறுத்த உத்தரவிட்ட நீதவான் இது தொடர்பான ஆரம்ப விசாரணைகள் எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறும் என்றும்,அதுவரை இப்பகுதி முழுமையான பொலிஸ் பாதுகாப்பிற்குள் கொண்டு வரப்பட வேண்டும் என்று உத்தரவிட்டார்.

## ஜெனீவா செல்கிறது ஓய்வூதிய விவகாரம்

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள சங்கத்தின் செயலாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமசிறி மானகே, " முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத்தை இரத்து செய்ய அமைச்சரவை ஏற்கனவே முடிவு எடுத்துள்ளது. இது மிகவும் நியாயமற்ற முடிவு என்று கூறி தங்கள் மருந்துகளைப் பெற ஓய்வூதியம் வரும் வரை காத்திருக்கும் வயதான பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இந்த முடிவால் பெரும் சிக்கலில் சிக்குவார்கள்" என்றும் சுட்டிக்காட்டினார்.

ஒரு குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளைக் கூட ஓய்வூதியத்தால் பூர்த்தி செய்ய முடியாத சூழ்நிலையில் ஓய்வூதியத்தை இரத்து செய்வதால் ஏற்படும் சூழ்நிலையை பரிசீலிக்குமாறும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## "வலி வடக்கு காணி உரிமம் இல்லாது போகும் அபாயம்"

ராணுவத்தின் பிடியில் உள்ள வலி வடக்கு காணிகளை விடுவிக்கக்கோரி, காணிகளை இழந்த வலி வடக்கு மக்களினால் ஊடக சந்திப்பு ஒன்று யாழ்.பாடி தனியார் விடுதியில் திங்கட்கிழமை (21) நடைபெற்றது.

இதன்போது இவ்வாறு கூறிய அவர் மேலும் கூறுகையில் -

இன்னமும் 2,808 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ளதாக தெல்லிப்பளை பிரதேச செயலகம் கூறுகிறது. ஆனால், யாழ் மாவட்டச் செயலகம் 2,800 ஏக்கர் நிலம் என்று கூறுகின்றது.

இவ்விரு அரச நிறுவனங்களும் முதலில் ஒரு சமநிலையில் தகவல் பதிவை கொண்டிருக்க வேண்டும். அதேவேளை மாவட்ட செயலாளர் எதேச்சத்தனமாக தகவல்களையும் கூறக் கூடாது.

இதேநேரம் 2013 ஆம் ஆண்டு இது தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானியில் 6317 ஏக்கர் நிலம் ராணுவத்தின் பிடியில் இருப்பதாக என்று கூறியிருந்தது. அத்துடன் அவை அனைத்தும் அரச காணிகள் என்றும் தாகவும் கூறுகிறது.

இதேவேளை கடந்த ஆட்சியாளர்களால் பல ஏக்கர் நிலங்கள் விடுவிக்கப்பட்டன. அதேபோன்று வீதிகள், ஆலயங்கள் என்றும் மக்களிடம் கையளிக்கப்பட்டன.

ஆனால், இந்த வர்த்தமானியின்

> **இதற்குரிய நடவடிக்கையை ஜனாதிபதி விரைந்து எடுக்க வேண்டும். இல்லையேல் ஜனாதிபதி செயலகம் முன்பாக தொடர் போராட்டத்தை முன்னெடுப்போம் என்றும் தெரிவித்துள்ளனர்**

பிரகாரம் இன்னமும் அரச காணிகளாகவே மக்களின் காணிகள் இருக்கின்றன. எனவே, குறித்த வர்த்தமானியை உடனடியாக இரத்து செய்ய வேண்டும்.

இதற்கு இன்றைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு ரத்து செய்தால் மட்டுமே மக்களின் காணி மக்களுக்குரிய தாகும். இல்லையேல் அவை சட்டவிரோதமானவையாகவே இருக்கும். மேலும் மக்களின் காணிகளில் ராணுவம் விவசாயம் செய்வதாகவும் கூறப்படுகிறது

அதன்படி காணிகளை விடுவிப்பதுடன் இவ்வளவு காலமும் அக்காணிகளை வைத்து விவசாயம் உள்ளிட்ட நடவடிக்கை களை செய்வதற்கான குத்தகை இழப்பீடும் உரிய நபர்களுக்கு வழங்குவதுடன் வர்த்தமானியையும் ரத்து செய்ய வேண்டும்.

இதற்குரிய நடவடிக்கையை ஜனாதிபதி விரைந்து எடுக்க வேண்டும். இல்லையேல் ஜனாதிபதி செயலகம் முன்பாக தொடர் போராட்டத்தை முன்னெடுப்போம் என்றும் தெரிவித்துள்ளனர்.

மூன்று ஆண்டுகளில்

## மருத்துவர்களில் 1,489 பேர் பறந்தனர்

2022ஆம் ஆண்டு முதல் 2024ஆம் ஆண்டு வரையிலான மூன்று ஆண்டுகளில் மருத்துவ நிபுணர்கள் உட்பட 1,489 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என்று ஒரு புதிய ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

2022 முதல் 2024 வரையிலான மூன்று ஆண்டு காலப்பகுதியில், முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்தே அவர்கள், நாட்டைவிட்டு வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக, அரசுக்கும் வரி செலுத்துவோருக்கும் 41.5 மில்லியன் டொலர் நிதி இழப்பு ஏற்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

வைத்தியர்களின் வெளியேற்றமானது, கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் சுகாதார உட்கட்டமைப்பை சீர்குலைக்கும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முக்கியமான சிறப்புப் பிரிவுகளில் வெற்றிடங்களுக்கு வழிவகுத்துள்ளதுடன் மருத்துவக் கல்வியை சீர்குலைத்தது என்றும் ஆய்வு ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்ட "சர்வதேச சுகாதார திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ இதழ்" இந்த தகவல்களை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸார்களில்

## "40 வீதமானோருக்கு தொற்றா நோய்கள்"

நாட்டிலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களில் 40 வீதமானோர் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களில் 30 வீதமானோர் இதுவரை பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை என்றும் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் பொலிஸ் அதிகாரிகளின் குழந்தைகளுக்கு பாடசாலைப் பொருட்களை வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்று பேசியபோது பதில் பொலிஸ் மா அதிபர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# சபாத் இல்லத்தை அகற்றக்கோரி ஆர்ப்பாட்டம்

அபு அலா, எஸ்.எம்.அறூஸ்



பொத்துவில் அறுகம்பை பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள இஸ்ரேல் நாட்டவர்களால் முன்னெடுத்துச் செல்லப்படும் சபாத் இல்லத்தை உடனடியாக மூட நடவடிக்கை எடுக்குமாறு அரசைக் கோரி கண்டன ஆர்ப்பாட்டமொன்று அட்டாளைச்சேனை பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்களால் திங்கட்கிழமை (21) அன்று பிரதேச சபை முன்றலில் முன்னெடுக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் முதலாவது கன்னி அமர்வு திங்கட்கிழமை (21) அன்று தவிசாளர் ஏ.எஸ்.எம்.உவைஸ் தலைமையில் இடம்பெற்றது. இவ்விடயம் தொடர்பில் சகல உறுப்பினர்களாலும் பேசப்பட்டதுடன் அது தொடர்பான கண்டன தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

அத்தோடு சபை முடிவில் கண்டன ஆர்ப்பாட்டமும் செய்வதன்றும் முடிவு செய்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

# ஆணின் சடலம் மீட்பு



செ.தி.பெருமாள்

நுவரெலியா, நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடரதல்ல தோட்ட குடியிருப்பு பகுதியில் இருந்து ஆண் ஒருவரின் சடலம் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் 60 வயது மதிக்கத்தக்க எஸ்.வடிவேல் என தெரியவந்துள்ளது.

இறந்த நிலையில், சடலம் இருப்பதைக் கண்ட பிரதேச மக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து, குறித்த நபரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மேலும், சடலம் பிரேதப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# இரு பேருந்துகள் மோதி விபத்து: 21 பேர் காயம்



என்.ஆராச்சி

கொழும்பு - கண்டி வீதியின் கலிகமுவ அம்பன்பிட்டிய பகுதியில் திங்கட்கிழமை (21) காலை நிகழ்ந்த விபத்தில் 21 பேர் காயமடைந்ததாக கேகாலை பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் 19 பேர் கேகாலை பொது மருத்துவமனையிலும், இருவர் வரகாபொல மருத்துவமனையிலும் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களின் நிலை கவலைக்கிடமாக இல்லை என்றும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கேகாலையிலிருந்து இரத்தினபுரி நோக்கி பயணித்த தனியார் பேருந்து, வேரகொட பகுதியிலிருந்து கேகாலை நோக்கி பயணித்த இ.போ.ச பேருந்தின் பின்புறம் மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. விபத்து குறித்து கேகாலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முஸ்லிம் கல்லூரியால் 'அபேக்ஷா'க்கும் உதவி



அஷ்ரப் ஏ சமத்

கொழும்பு-4 முஸ்லிம் மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கத்தினால் சேகரிக்கப்பட்ட நிதியில் மஹரகம அபேக்ஷா புற்றுநோய் வைத்தியசாலைக்கு 2 Inpusion Pumps, and Mutli Para Monitor ஐ, மருத்துவ அதிகாரி டொக்டர் ரொஷான் அமரதுங்க, பிரதான தாதி குருசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.

இத் திட்டத்தினை ராசியா உவைம், சமான் நாசீம் ஆகியோர் முன்னெடுத்தனர். கல்லூரி அதிபரும் பழைய மாணவிகள் சங்கத்தின் தலைவி நஸ்ரியா முனாஸ், மற்றும் பழைய மாணவிகள் சங்கத்தின் உப தலைவி பெரோஸா முஸம்மில் மற்றும் செயற்குழு அங்கத்தவர்களும் படத்தில் காணப்படுகின்றனர்

# அஸ்கிரி அனுநாயக்க தேரர் காலமானார்



முன்னாள் மூத்த விரிவுரையாளரும், வயம்ப அத்கந்த ரஜமஹா விஹாரையின் தலைமை பீட உறுப்பினரும், ஸ்ரீ தம்மதசிபிதான மகா விஹாரவன்சிகா சியாமோபலி மகா நிகாயவின் அஸ்கிரி மகா விஹாரய பர்சாத்தின் அனுநாயக்கருமான வணக்கத்திற்குரிய ஆனமடுவே ஸ்ரீ தம்மதசி தேரர் காலமானார்.

மாரடைப்பு காரணமாக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், தனது 67ஆவது வயதில் தேரர் ஞாயிற்றுக்கிழமை (20) இரவு காலமானதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்ணாரின் பூதவுடல் 24 ஆம் திகதி மாலை அஸ்கிரிய பொலிஸ் மைதானத்தில் அரச மரியாதையுடன் தகனம் செய்யப்படும் எனவும் அன்று நண்பகல் 12.00 மணிக்குப் பிறகு சில பாடசாலைகள் மூடப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பௌத்த மத மற்றும் கலாச்சார விவகாரங்களுக்கான பிரதி அமைச்சர் கமகெதர திசாநாயக்கவின் தலைமையில் அஸ்கிரிய மகா விஹாரையின் உடுகம ஸ்ரீ புத்தரக்கித நினைவு மண்டபத்தில் நடைபெற்ற கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

# உலர்ந்த இஞ்சியுடன் ஒருவர் கைது



இலங்கை கடற்படை மற்றும் பொலிஸாருடன் இணைந்து 2025 ஜூலை 19 ஆம் திகதி நுரைச்சோலை சஞ்சீதவத்தை பகுதியில் நடத்திய சிறப்பு கூட்டு தேடுதல் நடவடிக்கையின் போது, சட்டவிரோதமாக நாட்டிற்கு இறக்குமதி செய்யப்பட்டதாக சந்தேகிக்கப்படும் சுமார் இரண்டாயிரத்து எண்ணூற்று இருபத்தெட்டு (2828) கிலோ கிராம் உலர்ந்த இஞ்சியுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல் விஜயவிற்கு சொந்தமான ஒரு பகுதியாக இருக்கும் நுரைச்சோலை கடற்படைப் பிரிவு, நுரைச்சோலை பொலிஸாருடன் இணைந்து, நுரைச்சோலை சஞ்சீதவத்தை பகுதியில் நடத்தப்பட்ட இந்த சிறப்பு கூட்டுத் தேடுதல் நடவடிக்கையின் போது, அப்பகுதியில் சந்தேகத்திற்கிடமான ஒரு வீட்டை சோதனையிட்டனர்.

இச்சோதனையின் போது, கடல் வழியாக சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டு வரப்பட்டதாக சந்தேகிக்கப்படும் எழுபது (70) பைகளில் அடைக்கப்பட்ட சுமார் 2828 கிலோ கிராம் உலர்ந்த இஞ்சியுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார். மேலும், இந்த நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நுரைச்சோலையை வசிக்கும் 33 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். மேலும், சந்தேக நபரும், உலர்ந்த இஞ்சி பொட்டலமும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக நுரைச்சோலை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டன

# தந்தையின் சித்திரவதை தாங்காது காட்டுக்குள் ஓடிய மகள்

தனது தாய் வெளிநாட்டில் இருந்தபோது, தந்தை சித்திரவதை செய்ததால் வீட்டை விட்டு காட்டுக்கு ஓடிய 14 வயது பாடசாலை மாணவியைக் கண்டுபிடித்துள்ளதாக ஹதரலியத்த பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

14 மற்றும் 8 வயதுடைய இரண்டு மகள்களும், அதே பொலிஸ் எல்லைக்குள் வரும் கஹபத்வலவின் கோனதென்ன பகுதியில், தங்கள் 36 வயதுடைய தந்தையுடன் வசித்து வந்துள்ளனர். தந்தையின் சித்திரவதை காரணமாக, மூத்த மகள் கடந்த 16ஆம் திகதி காலை வீட்டை விட்டு வெளியேறி, தனது பாடசாலை பையில் தனது துணிகளை வைத்து எடுத்து சென்றதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பாடசாலைக்குச் சென்ற மகள் மாலை வரை வீடு திரும்பவில்லை என்று ஹதரலியத்த பொலிஸில் தந்தை புகார் அளித்திருந்தார். உடனடியாக அவளைத் தேடிச் சென்ற பொலிஸார், நாள் முழுவதும் உண்ணாமல் இருந்ததால், அவள் ஒரு மரத்தடியில் படுத்து தூங்கிக் கொண்டிருந்ததைக் கண்ட பொலிஸார் அச்சிறுமியை மீட்டு அழைத்து வந்ததாகத் தெரிவித்துள்ளனர்



# யுதகனாவ பெரஹரா



புத்தள யுதகனாவ ரஜ மகா விகாரையின் 2025 வருடாந்த எசல பெரஹரவின் இறுதி நாள் ரந்தோலி பெரஹரா சனிக்கிழமை (19) அன்று நடைபெற்றதுடன் இதில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பங்கேற்றார்.

சுமனசிறி குணதிலக















ஜோன் லௌட்னரின் ஒளிவேதி விளைவளிமண்டல மறுசீரமைப்பு மற்றும் மறுவடிவமைப்பு, 2000, 2020, ஒளிப்படம்: ஜோசுவா வைட்

22 வது வருடாந்த ஜெஃப்ரி பாவா நினைவுச் சொற்பொழிவு

“கடிகாரங்களும் மேகங்களும்” -
ஃபிராங்க் எஷர் மற்றும் ரவி குணவர்தன

வியாழக்கிழமை, 24 ஜூலை 2025
மாலை 6.30 மணி.
இலங்கை மன்றம்
இலங்கை மன்றம் மாவத்தை, கொழும்பு 07



ஃபிராங்க் எஷர் மற்றும் ரவி குணவர்தன ஆகியோர் லொஸ் ஏஞ்சல்ஸை தளமாகக் கொண்ட எஷர் குணவர்தன கட்டடக்கலை நிறுவனத்தை 1995 இல் இணைந்து நிறுவினர். நிறுவனத்தின் திட்டங்களில் தனிப்பயன் வீடுகள் மற்றும் மனைகள், ரிச்சர்ட் நியூட்ரா மற்றும் சார்லஸ் மற்றும் ரே ஈம்ஸ் உள்ளிட்ட குறிப்பிடத்தக்க கட்டடக் கலைஞர்கள் மற்றும் வடிவமைப்பாளர்களின் பணிகளைப் பாதுகாத்தல் மற்றும் உலகெங்கிலும் உள்ள கலைஞர்கள், கலைக்கூடங்கள் மற்றும் கண்காட்சிகளுடனான கூட்டு முயற்சி ஆகியவை அடங்கும். எஷர் மற்றும் குணவர்தன ஆகியோர் கலிபோர்னியாவின் இலங்கை சமூகத்திற்காக ஒரு தியான மைய வளாகத்தையும் வடிவமைத்துள்ளதுடன். 2018 இல் லொஸ் ஏஞ்சல்ஸ் கவுண்டி கலை அருங்காட்சியகத்தில் இடம்பெற்ற *அலங்காரத் தீவு: இலங்கையின் கலைப்படைப்புகள்* (The Jeweled Isle: Art from Sri Lanka) என்ற கண்காட்சியின் வடிவமைப்பாளர்களாகவும் கியூரேட்டோரியல் ஆலோசகர்களாகவும் இருந்துள்ளனர் . அவர்கள் பல பல்கலைக்கழகங்களில் கற்பித்துள்ளதுடன் 2017 இல் ஒரு தனிவுரைவு நூலை வெளியிட்டுள்ளனர்: *கடிகாரங்கள் மற்றும் மேகங்கள்: எஷர் குணவர்தனவின் கட்டடக்கலை.*

அனுமதி இலவசம். வரையறுக்கப்பட்ட இடங்களே உள்ளன. முன் பதிவு அவசியம்.
பி.ப. 6.20 மணிக்குள் உங்கள் இருக்கையில் அமர்ந்திருங்கள். இந்த சொற்பொழிவு ஆங்கிலத்தில் நிகழ்த்தப்படும்.
பதிவு செய்ய geoffreybawa.com/memorial-lectures இற்கு செல்லுங்கள்.

ஏற்பாடு
GEOFFREY BAWA TRUST

எக்ஸ்குளூஸிவ் மீடியா பார்ட்னேர்ஸ்
the SUNDAY TIMES DAILY MIRROR தமிழ்Mirror லங்காதீப

# குழந்தைகள் மீதான பெற்றோர்களின் வன்முறைகள் அதிகரிப்பு

குழந்தைகள் தங்கள் பெற்றோர் இருவரையும் அறிந்துகொள்ள உரிமை உண்டு. பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை மன மற்றும் உடல் ரீதியான துஷ்பிரயோகம் மற்றும் பிற அச்சுறுத்தல்களிலிருந்து பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளனர். எனினும், நாட்டில் இடம்பெறும் சம்பவங்களைப் பார்க்கும்போது ஒவ்வொன்றும் தலைகீழாகவே இடம்பெறுகின்றன.

நாட்டின் பொருளாதார நிலைமைகளை பார்க்குமிடத்து, முழுமையான நேர பணியில் ஈடுபட்டிருந்தாலும், பகுதிநேர தொழில் அல்லது தொழில்களைச் செய்யவேண்டும். எனினும், செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்காகப் பலரும் பல வகையான விடயங்களைக் கையாளுகின்றனர்.

வாடகைக்கு வாகனங்களை அமர்த்திக் கொள்வதை குறைத்துக்கொண்டுள்ளனர். பொது போக்குவரத்தில் பயணிப்போர், இறங்கவேண்டிய ஒரு பஸ் தரப்பிடத்துக்கு முன்னதாக இறங்கிக்கொள்கின்றனர். இதனால், ஒரு சிறுதொகை மிச்சப்படுத்தப்படுகின்றது. இன்னும் சிலர், வெளிநாடுகளுக்குப் படையெடுக்கின்றனர்.

தனது தாய் வெளிநாட்டிலிருந்தபோது, தந்தை சித்திரவதை செய்ததால் வீட்டை விட்டு காட்டுக்கு ஓடிய 14 வயது பாடசாலை மாணவியைக் கண்டுபிடித்துள்ளதாக ஹதரலியத்த பொலிஸார் தெரிவித்தனர். இது மிக அண்மையில் இடம்பெற்ற சம்பவமாகும். ஆக, குழந்தைகள் மீதான சித்திரவதைக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

குழந்தைகள் தங்கள் திறன்கள் மற்றும் ஆர்வங்களுக்கு ஏற்ப கல்வி கற்பிக்கப்பட வேண்டும். அவர்களைப் பாதிக்கும் முடிவுகளை எடுப்பதற்கு முன் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஆலோசனை வழங்க வேண்டும். குழந்தைகள் வளர்ந்து முதிர்ச்சி அடையும் போது அவர்களுக்கு அதிக கருத்து தெரிவிக்க வேண்டும்.

5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் சம்பந்தப்பட்ட பெரும்பாலான விபத்துகள் வீட்டில் நிகழ்கின்றன. பாதுகாப்பான சூழல் மற்றும் பெற்றோரின் மேற்பார்வை வாழ்க்கையின் முதல் ஆண்டில் ஏற்படும் விபத்துகளின் வாய்ப்பை வெகுவாகக் குறைக்கிறது.

கடுமையான விபத்துகளைத் தடுக்க, பெற்றோர்களும் குழந்தைகளைப் பராமரிக்கும் மற்றவர்களும் விபத்துகளுக்கும் ஒவ்வொரு வயதுக் குழந்தைகளின் உடல், மன மற்றும் உணர்ச்சி வளர்ச்சிக்கும் உள்ள தொடர்பை அறிந்திருக்க வேண்டும். குழந்தைகள் 10-12 வயது வரை சூழலில் ஏற்படும் விபத்துகளை மதிப்பிட்டுச் சமாளிக்க முதிர்ச்சியடைய மாட்டார்கள்.

ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலையில் வாழும் அல்லது தங்கள் சொந்த உடல்நலம் மற்றும் வளர்ச்சிக்கு ஆபத்தை விளைவிக்கும் குழந்தைகள் தேவையான உதவியைப் பெறுவதை உறுதி செய்வதே குழந்தை பாதுகாப்புச் சட்டத்தின் நோக்கமாகும்.

13-18 வயதுடைய இளைஞர்கள் தங்கள் பெற்றோரின் அறிவுறுத்தல்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும், மற்றவர்களின் கருத்துகளை மதிக்க வேண்டும், மேலும் சட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும். 18 வயதில், இளைஞர்கள் சட்டப்பூர்வ திறனைப் பெறுகிறார்கள், அதாவது அவர்களின் சொந்த நிதி மற்றும் தனிப்பட்ட விவகாரங்களைத் தீர்மானிக்கும் உரிமை. இதன் பொருள் அவர்கள் தங்கள் சொந்த சொத்துக்களுக்குப் பொறுப்பாவார்கள், மேலும் அவர்கள், எங்கு வாழ விரும்புகிறார்கள் என்பதைத் தீர்மானிக்க முடியும், ஆனால் அவர்கள் தங்கள் பெற்றோரின் ஆதரவைப் பெறும் உரிமையை இழக்கிறார்கள்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136


Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

இடி, மின்னலுடன் பெருமழை பெய்தால், அது நிரந்தரமாகப் பெய்துவிடுமோ என்று மக்கள் பயப்படுவது வழக்கம். அது நிலையற்ற மாற்றம் என்பதை எவர்தான் உணர்கின்றார்கள்.

துன்பங்கள் வந்தால், அது மாறாது எனத் தீர்மானமாக எண்ணிவிடுகின்றார்கள். வாழ்க்கைகூட வானிலை மாற்றம் போன்றதுதான். திடீர் என மழை வரும் புயல் வரும் அப்புறம் கடும் வெயிலும் அனலாய்க் கொதிக்கும்.

அந்தந்தச் சூழ்நிலை எதுவோ, அதற்கு மாறாக மனிதர்கள் பேசி விடுகின்றார்கள். மாற்றங்கள் பொதுவானவை என இன்னமும் புரிந்து கொள்ளாதது போல் வாழ்வது, வேடிக்கையாகத் தோன்றுகின்றது.

எந்த நிலையையும் ஏற்றுக் கொண்டு, தளர்வு இல்லாத நிலையில் வாழப்பழக வேண்டும். இயற்கை எமக்கு எதிரி அல்ல, அதைத் திட்டுவது அநீதி. காலமாற்றம் எல்லாமே மக்களின் நலனுக்காகவே உருவானவை.

நல்லவைகளைக் கெட்டவைகள் என கருதலாகாது. மகிழ்ச்சியை அனுபவிக்க வேண்டுமாயின், எல்லா அனுபவங்களையும் ஏற்று ரசிக்க வேண்டும். இன்பத்தை ரசிப்போர், துன்பத்தையும் எதிர்கொள்ள வேண்டும்.

– பருத்தியூர் பால.வயிரவநாதன்

# வடக்கில் செம்மணி; கிழக்கில் குருக்கள்மடம்

**மொஹமட் பாதுஷா**

வடக்கில் தோண்டப்படும் செம்மணி புதைகுழிகள் பூதாகரமான விவகாரமாக மாறியுள்ள நிலையில், கிழக்கு மாகாணத்தில் இன்னும் தோண்டப்படாத குருக்கள்மடம் புதைகுழி விவகாரமும் சூடுபிடித்துள்ளது.

நீண்டகாலமாக யுத்தம் நடைபெற்ற நாடு என்ற வகையில், மனித குலத்திற்கு எதிரான பல சம்பவங்கள் நடந்தேறியிருக்கின்றன. கடத்தல், கப்பம் பெறல், படுகொலைகள், இனச் சுத்திகரிப்பு, இடம்பெயர்வு, சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்படல், கற்பழிப்பு, காணாமலாக்கப்படுதல், உடல் ஊனமடைதல், சகோதரக் குழுக்கள் மற்றும் மக்களைக் கொலை செய்தல்.... ஏன்? இவற்றைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

இலங்கையில் இவ்வாறு இடம்பெற்ற மீறல்களுக்குத் தனியே ஒரு தரப்பு மட்டும் பொறுப்பல்ல. விடுதலைப் புலிகள் தமிழ் ஆயுதக் குழுக்கள், அடிப்படைவாத பயங்கரவாதக் குழுக்கள், படைத் தரப்பில் ஒரு பிரிவினர், இந்திய அமைதி காக்கும் படைகள், ஒட்டு ஆயுதக் குழுக்கள், அந்தந்த பிரதேசங்களில் இயங்கிய சண்டியர்கள் மட்டுமன்றி ஜே.வி.பி. மற்றும் கடும்போக்கு இயக்கங்கள், அரசியல் சக்திகள் மீதும் குற்றச்சாட்டுக்கள் உள்ளன.

இதில் ஒன்றான செம்மணி விவகாரம் இன்று நேற்று உருவெடுத்ததல்ல. 1990இல் யாழ்ப்பாணம், சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி அரச படையினரால் வல்லுறவு செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டமை அதனுடன் இணைந்ததாகப் பலர் கொல்லப்பட்டமை அக்காலத்தில் பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது.

அந்த வழக்கில் நீதிமன்றத்தால் பிரதான குற்றவாளியாக அடையாளம் காணப்பட்ட படைச் சிப்பாயான சோமரத்ன ராஜபக்ஷ வழங்கிய வாக்குமூலங்களின் அடிப்படையிலேயே சிந்துப்பாத்தி மயானப் பகுதியை தோண்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. இப் புதைகுழியில் இருந்து சிறுவர்களின் எலும்புக்கூடுகள் உட்பட அதிக எண்ணிக்கையிலான என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளமை பல களநிலை மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஆயுததாரிகள் கொல்லப்படுவதும், போர்க்களத்தில் சண்டையிடுபவர்கள் மரணிப்பதும் உலக ஒழுங்கில் சாதாரண விடயம். படையினர் அல்லது ஆயுதக் குழுக்களுடன் நெருங்கிச் செயற்படுபவர்களும் வேறு கண்ணோட்டத்திலேயே நோக்கப்பட வேண்டும்.

ஆனால், எந்த இனத்தை, மதத்தை சேர்ந்தவராக இருந்தாலும் அப்பாவிகள், நிராயுதபாணிகள் மற்றும் குழந்தைகள், பெண்கள், வயோதிபர்களை கொல்வது மனித குலத்திற்கு எதிரான குற்றமாகும். இதனை சர்வதேச சட்டங்கள் தெளிவாகக் குறிப்பிடுகின்றன. எனவே, இலங்கையில் இவ்வாறு கொல்லப்பட்ட அனைத்துச் சமூகங்களைச் சேர்ந்தவர்களுக்கும் நீதி கிடைக்க வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை.

அந்த வகையில், செம்மணி புதைகுழியில் பொதுமக்கள் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டிருந்தால் அதற்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும். செம்மணியில் மட்டுமல்ல வேறு இடங்களிலும் அநியாயமாகக் கொன்று புதைக்கப்பட்டவர்களுக்கும் காலம் தாழ்ந்த நிதியையாவது பெற்றுக் கொடுப்பது கட்டாயமாகும்.

இது இவ்வாறிருக்க,, வேறு பல படுகொலைகள், புதைகுழிகள் மற்றும் வதைமுகாம்கள் பற்றிய கருத்துக்களும் முன்வைக்கப்படுவதைக் காண முடிகின்றது.

இதில் ஒன்றுதான் 1990ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட 165இற்கு குறைவில்லாத முஸ்லிம்களின் மட்டக்களப்பு, குருக்கள்மடம் புதைகுழியாகும். இந்தப் புதைகுழி தோண்டப்பட்டு, விசாரணை நடத்தப்பட்டு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று முஸ்லிம்கள் கோரி நிற்கின்றனர்.

80களின் இறுதி மற்றும் 90களில் விடுதலைப் புலிகளும் வேறு சில ஆயுதக் குழுக்களும் வடக்கு, கிழக்கில் முஸ்லிம்களுக்கு எதிரான பல அக்கிரமங்களைக் கட்டவிழ்த்து விட்டன. வடக்கில் இருந்து பூர்வீக முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டமை, கிழக்கில் ஏறாவூர், காத்தான்குடி, முதல் அக்கரைப்பற்று வரை பல பள்ளிவாசல்களில் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், வயல்வெளிகள், வீதிகளில் நடத்தப்பட்ட பலியெடுப்புக்கள், கப்பம், கடத்தல் என நீளமான பட்டியல் உள்ளது.

முஸ்லிம்களுக்கு எதிராகத் தமிழ் ஆயுதக் குழுக்கள், இந்திய இராணுவம் உள்ளடங்கலாக ஆயுதம் தரித்த தரப்புக்களால் நடத்தப்பட்ட அநியாயங்களை, சர்ஜூன் ஜமால்தீனின் ‘சாட்சியமாகும் உயிர்கள்’ போன்ற வரலாற்று நூல்களில் மட்டுமன்றி, இப்போது இணையத்தளங்களிலும் காணக் கூடியதாக உள்ளது.

ஆனால், தங்களது இழப்பிற்காக முஸ்லிம்கள் ஒரு சமூகமாகத் தொடர்ச்சியாகப் போராடவில்லை என்பது உண்மைதான். இது மிகப் பெரும் சமூக, அரசியல் தவறு என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆனால், முஸ்லிம்கள் நீதிக்காகக் கொஞ்சமும் போரடவில்லை என கூற முடியாது.

ஒரு கட்டத்தில் இறைவனின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு அலுத்துப் போனார்கள் என்பதுதான் உண்மை. ஆயினும், மேற்குறிப்பிட்ட விவகாரங்களுக்கு இன்னும் நீதி நிலைநாட்டப்பட வேண்டிய தேவை மீதமிருக்கின்றது என்பதை மறந்து விடக் கூடாது.

அவற்றுள், வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றம், பள்ளிவாசல் படுகொலைகள் போல மிக முக்கியமான ஒரு விடயம்தான், குருக்கள்மடம் படுகொலை ஆகும்.

1990ஆம் ஆண்டு ஜூலை 12ஆம் திகதி, புனித ஹஜ் கடமையை முடித்து விட்டு நாடு திரும்பிய நிலையில் கல்முனை, மட்டக்களப்பு வீதியால் சென்று கொண்டிருந்த ஹஜ்ஜாஜிகள் சுமார் 150 பேர் உட்பட 165 இற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் குருக்கள்மடம் பிரதேசத்தில் வைத்து புலிகளால் வாகனங்களில் இருந்து இறக்கப்பட்டு, கடற்கரைப் பக்கத்திற்குக் கடத்திச் செல்லப்பட்டு காட்டுமிராண்டித்தனமாகக் கொலை செய்யப்பட்டனர்.

அக்காலத்தில் இப்பகுதியின் ஊடாக முஸ்லிம்கள் தனியே பயணிப்பதற்கு அஞ்சியதால், பல வாகனங்கள் ஒன்று சேர்ந்தே பெரும்பாலும் பயணிப்பதுண்டு. அப்படி கல்முனை பக்கமாக இருந்து காத்தான்குடிப் பக்கமாக தொடரணியாக வந்த வாகனங்களில் இருந்த முஸ்லிம்களே இவ்வாறு கொல்லப்பட்டனர்.

ஹஜ் கடமையை நிறைவு செய்து விட்டு பஸ்ஸில் வந்தவர்கள், வீதியால் வந்த முஸ்லிம் வியாபாரிகள், தொழிலுக்குச் சென்றவர்கள். வைத்தியசாலைக்குப் போய்க் கொண்டிருந்தவர்கள் என முஸ்லிம்கள் மட்டும் வடித்தெடுக்கப்பட்டு கொல்லப்பட்டனர்.

இவர்களுள் பெண்களும், குழந்தைகளும், வயோதிபர்களும் இருந்தனர். அவர்கள் கெஞ்சி மன்றாடியதாகவும், ஆனால், மிக ஆவேசமாக வெறிபிடித்தவர்களாக நடந்து கொண்ட புலிகளின் காதில் இந்த மன்றாட்டங்கள் எடுபடவில்லை என்றும் முஸ்லிம் தரப்பில் மட்டுமன்றி, சம்பவத்தைத் நேரில் பார்த்த தமிழ் மக்களும் கூறுகின்றார்கள்.

கூடியதாகவுள்ள தகவலின் படி, பசீர் என்ற ஒருவரைத் தவிர வேறெந்த முஸ்லிமும் உயிருடன் தப்பிவரவில்லை.

இது சர்வசாதாரணமான படுகொலையல்ல. தமது சமூகத்தின் உரிமைகளுக்காகப் போராடுவதாகக் கூறிய விடுதலைப் புலிகள், நிராயுதபாணியான, இன்னுமொரு சிறுபான்மை சமூகத்தவர்களை இலக்கு வைத்து, ஒரு சில மணி நேரங்களுக்குள் 165 பேரைக் கொலை செய்தது என்பது மிகப் பெரும் குற்றமும் மீறலும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த சம்பவத்தைக் கேள்விப்பட்ட முஸ்லிம் சமூகம், இவர்கள் ‘கடத்தப்பட்டு இருக்கின்றார்கள்’ என்று கருதி அவர்களை மீட்பதற்கான முயற்சியை மேற்கொண்டனர். ஒரு சமாதானக் குழுவாகப் புலிகளைத் தொடர்புகொள்ள முயன்றனர். இதற்காக கிறிஸ்தவ மதகுரு ஒருவரின் உதவியை நாடினர். ஆனால், அந்த முயற்சி பயனளிக்கவில்லை.

‘முஸ்லிம் தரப்புடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டாம்’ என்ற தொனியில் அந்த மதகுருவுக்கு புலிகள் கடிதம் அனுப்பியிருந்தனர். அந்தக் கடிதத்தை மதகுரு முஸ்லிம் தூதுக் குழுவிடம் காட்டிய போதுதான், இதனைப் புலிகளே செய்துள்ளார்கள் என்பது உறுதியானது என்று சம்பந்தப்பட்டோர் கூறியுள்ளனர்.

அதன்பிறகு, அந்த முஸ்லிம்கள் இனி திரும்பி வர மாட்டார்கள். எனவே, அவர்களுக்கு உங்களது முறைப்படி இறுதிக்கிரியை செய்யுங்கள் என்ற தகவல்களும் முஸ்லிம் தரப்புக்குக் கிடைத்ததாகப் பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றார்கள்.

ஆகவே, இந்த சம்பவத்தை நேரில் கண்ட தமிழர்கள், தப்பிவந்த நபர், விடயமறிந்து ஊரை விட்டு வெளியேறிய தமிழ் மக்கள். சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்ட முஸ்லிம்கள், கிறிஸ்தவ மதகுரு என பலரது சாட்சியங்கள் உள்ளன. ஏன், சில விடுதலைப் புலி உறுப்பினர்களும் உலகில் எங்கோ உயிருடன் இருக்கலாம்.

விடுதலைப் புலிகள் முஸ்லிம்களைக் கொன்று, குருக்கள்மடம் கடற்கரையோரமாக இருந்த ஒரு கிடங்கிவ் போட்டு விட்டுச் சென்று விட்டதாகவும், சில தினங்களின் பின்னர் அப்பகுதிக்கு வந்த தமிழர்களே ஒரு பெரிய குழியில் இட்டு சடலங்களை மூடியதாகவும் கூறப்படுகின்றது. எனவே, அவர்களும் சாட்சியமாகின்றனர்.

இதற்கு நீதியைப் பெற முஸ்லிம்கள் பல முயற்சிகளை 2014ஆம் ஆண்டு இதனைத் தோண்ட நீதிமன்றம் நடவடிக்கை எடுத்து அது பின்னர் கைவிடப்பட்டது. 2020ஆம் ஆண்டு நீதிமன்றத்திற்கு வந்த வழக்கு சட்ட மா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமையக் கிடப்பில் போடப்பட்டது. இப்போது அந்த வழக்கு விசாரணையை நீதிமன்றம் மீள ஆரம்பித்துள்ளது.

இந்நிலையில், முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் றவூப் ஹக்கீம் அல்லது முஸ்லிம் சமூகம் ஏன் இப்போது இதனைப் பற்றிப் பேசுகின்றது என்று யாராவது கேட்பது, புலிகள் செய்ததாகக் கூறப்படும் இக்குற்றத்திற்கு நீதி கிடைப்பதற்கு எதிரான எத்தனமாகவே அமையும்.

எனவே, செம்மணியிலும், குருக்கள்மடத்திலும் மட்டுமன்றி, அரந்தராவையிலும் தலதா மாளிகையிலும், கொழும்பிலும், கொச்சிக்கடை மற்றும் நீர்கொழும்பு உள்ளிட்ட தேவாலயங்களிலும் என எல்லா இடங்களிலும் மேற்கொள்னப்பட்ட படுகொலைகளின் வலி என்பது சமமானது. டில்லாவற்றுக்கும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும்.

## கடிதங்கள்

# “வீதியை செப்பனிட்டு தரவும்”

மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட மஸ்கெலியா நகரில் உள்ள மத தளங்களுக்கு மற்றும் பாடசாலைகளுக்கு செல்லும் நுழைவாயில் வீதி பாரிய குன்றும் குழியுமாகக் காணப்படுகிறது.

அவ்வீதியில் ஸ்ரீ சண்முக நாதர் ஆலயம்,சுமணாராம பௌத்த விகாரை, மஸ்கெலியா முஸ்லிம் பள்ளிவாசல், சென் ஜோசப் கிறிஸ்தவ தேவாலயம்,சமன்னெலிய சிங்கள பாடசாலை அமைந்துள்ளது. அத்துடன், சுமார் முன்னூறுக்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன.

ஆலயங்களுக்கு செல்லும் பக்தர்கள், பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் குடியிருப்பாளர்கள் பாரிய அளவில் இன்னலுக்கு முகம் கொடுக்க வேண்டி உள்ளது.

இது குறித்து மஸ்கெலியா பிரதேச சபை உடன் நடவடிக்கை எடுத்துக் குறித்த வீதியைச் செப்பனிட்டுத் தருமாறு மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

– செ.தி.பெருமாள்

இலங்கையின் உயிர்ச்சூழல் தொகுதிகள்

# நமது சூழல் வளங்களின் காவலன்



ஜோசப் ஜெயந்தி மேரி
மூன்றாம் வருடம்,
கலைப்பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

பூமி, மனித இனம் தோன்றிய காலம் முதல் இன்று வரை, வாழ்வதற்கான அரிய இயற்கை வளங்களை வழங்கி வருகின்றது. இவ்வளங்களில் பல இன்றும் மனித தேவைகளைப் பூர்த்தி செய்வதோடு மட்டுமல்லாது, மற்ற உயிரினங்களின் வாழ்வாதாரமாகவும் திகழ்கின்றன. இவற்றைப் பாதுகாக்கும் இடங்களாகவே உயிர்ச்சூழல் தொகுதிகள் (Ecosystems) அமைகின்றன. இயற்கையின் சமநிலையைப் பேணுவதற்கும், உயிரினங்களை காக்கவும் இவை முக்கிய பங்கு வகிக்கின்றன.

இலங்கை, நான்கு பக்கங்களும் கடலால் சூழப்பட்ட, பசுமையால் போர்த்தப்பட்ட ஒரு சிறிய தீவாகும். தீவாக இருந்தாலும், இது உயிரினங்கள், தாவரங்கள், நுண்ணுயிர்கள் என பலவகையான உயிர் வகைகளை உள்ளடக்கியது. அவை தங்கள் சுற்றுச்சூழலான காலநிலை, நீர், தரைத்தோற்றம் போன்ற அம்சங்களுக்கு ஏற்ப ஒன்றாகச் செயல்படுவதால் இவை உயிர்ச்சூழல் தொகுதிகளாக அடையாளம் காணப்படுகின்றன.

உலகளவில் "Biodiversity Hotspot" எனப்படும் நாடுகளில் இலங்கை முக்கிய இடம் பிடிக்கின்றது. இது அதன் உயிரினப் பன்மையும், சூழலியல் செல்வங்களும் காரணமாகும்.

சிங்கராஜா மழைவனம் (Sinharaja Rainforest)

இலங்கையின் தெற்குப் பகுதியில், இரத்தினபுரி, களுத்துறை, மாத்தறை மாவட்டங்களின் எல்லையில் அமைந்துள்ளது. இது 1988-ஆம் ஆண்டு யுனெஸ்கோ உலக பாரம்பரியப் பகுதியாக அறிவிக்கப்பட்டது. மேலும், இது biosphere reserve ஆகவும் செயல்படுகின்றது. இந்நிலப்பரப்பானது சுமார் 88.64 சதுர கிலோமீட்டர்; ஆண்டு மழைவீழ்ச்சி 3000 mm-க்கும் மேல். இங்கு காணப்படும் ஈர்ப்பு இனங்கள் (Endemic species) உலகில் வேறு எங்கும் காண முடியாதவை:

பறவைகள்: இலங்கை குருவி (Sri Lanka Spurfowl)இலங்கை பசும்பறவை (Sri Lanka Blue Magpie)

விலங்குகள்: இலங்கை ஊசிக்குரங்கு (Purple-faced Leaf Monkey), நரிக்குறவன்

இலங்கையின் பாம்புகள்

பூச்சிகள் வகைகள்

100க்கும் மேற்பட்ட நத்தைகள்

இலங்கை கருப்பு தேனீ

தாவரங்கள்: நாகலிங்க மரம், பலவித மூலிகைகள், 60% களுக்கும் மேற்பட்டவை ஈர்ப்பு இனங்கள்

ஆகியவற்றினை சிங்கராஜா வன சூழல் தொகுதியானது தன்னகத்தே கொண்டு அமையப்பெற்றுள்ளது.

மற்ற உயிர்ச்சூழல் தொகுதிகள்:

ஹோரகலை, நக்கில்ஸ், கண்டி வனவலயம், யாலா விலங்கு சரணாலயம் மகாவெலி பரணகாடு, நுவரெலியா மலைப்பகுதி, குடாநாட்டின் காடு இவை எல்லாம் இலங்கையின் பல்வேறு தரைத்தோற்றம், மழைவீழ்ச்சி, வெப்பநிலை போன்ற அம்சங்களைப் பிரதிபலிக்கும் முக்கிய சூழல் தொகுதிகளாகும்.

எதிர்நோக்கும் பிரச்சினைகள்:

* சட்டவிரோத மர வெட்டல்
* பசுமை நிலங்களில் அபிவிருத்தித் திட்டங்கள்
* உயிரினப் பன்மை இழப்பு
* காலநிலை மாற்றத்தால் வெப்பநிலை உயர்வு
* கடலோர சூழல்களின் அழிவு
* பாரம்பரிய பயிர்களின் இழப்பு (GMO பயிர்களுக்கு இடமளித்தல்)
* சுற்றுலாப் பயணிகளால் ஏற்படும் சூழலியல் அழிவுகள்

உதாரணம்:

மன்னார் வளைகுடா, கற்பிட்டி, முல்லைத்தீவு கடற்கரை ஆகியவை தற்போது அழிவின் விளிம்பில் உள்ள கடலோர உயிர்ச்சூழல் பகுதிகள்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள்:

சுற்றுச்சூழல் மற்றும் வனவள சட்டங்கள்:

Forest Ordinance (2009)

Fauna and Flora Protection Ordinance (1937)

கடலோர மேலாண்மை:

Coast Conservation Act (1981)

சமூக விழிப்புணர்வு மற்றும் கல்வி:

பள்ளிகளில் பசுமை மன்றங்கள், சுற்றுச்சூழல் தினங்கள்

மூலதன நிதி மற்றும் சர்வதேச ஒப்பந்தங்கள்:

UNDP, GEF போன்ற அமைப்புகள்

Paris Agreement, Convention on Biological Diversity

சுற்றுச்சூழல் அமைப்புகள்:

Central Environmental Authority (CEA)

Department of Wildlife Conservation (DWC)

Green Policy Initiatives:

Haritha Lanka Programme, பசுமை வளர்ச்சி திட்டங்கள்

இலங்கையின் உயிர்ச்சூழல் தொகுதிகள் என்பது பொருளாதார வளமாக மட்டுமல்ல, சந்ததிக்குரிய மரபுச்செல்வமாகவும் விளங்குகின்றன. இவை அழிவடையாமல் பாதுகாக்கும் பொறுப்பு நமக்கே உரியது. இனி வரும் தலைமுறைக்கும் பசுமையோடு கூடிய புவி நிலத்தை வழங்க நாம் முயற்சி செய்ய வேண்டும்.







# அதிர்ச்சி கொடுத்த ஹன்சிகா

பிரபல நடிகை ஹன்சிகா 2022ஆம் ஆண்டு டிசெம்பர் 4ஆம் திகதி தொழிலதிபர் சோஹேல் கதுரியா என்பவரை திருமணம் செய்து கொண்டார்.



இவர்களது திருமணம் ஜெய்ப்பூரில் உள்ள முண்டாடோ கோட்டை அரண்மனையில் கோலாகலமாக நடைபெற்றதுடன், திருமண நிகழ்ச்சி டிஸ்னி+ஹாட்ஸ்டார் ஓடிடியில் 'லவ் ஷாதி ட்ராமா' என்ற பெயரில் வெளியானது.

ஹன்சிகாவின் கணவர் ஏற்கெனவே திருமணமானவர். கடந்த 2016ஆம் ஆண்டு ரிங்கி என்ற பெண்ணை திருமணம் செய்து கொண்டுள்ளார். அந்தத் திருமணத்தில் ஹன்சிகாவும் கலந்து கொண்டுள்ளார்.

ரிங்கு, ஹன்சிகாவின் தோழி. அதே போல் ஹன்சிகாவின் சகோதரர் பிரசாந்த் மோத்வானி நண்பராக சோஹேல் இருந்து வந்துள்ளார். இந்த நிலையில் ஹன்சிகா, சோஹேலை பிரிந்து வாழ்வதாக தகவல் வெளியாகியுள்ளது.

இருவரும் கருத்து வேறுபாடு காரணமாகப் பிரிந்து அவரவர் அம்மா வீட்டில் வசித்து வருவதாக கூறப்படுகிறது. இது திரையுலகில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




# காந்தாரா 2 படப்பிடிப்பு நிறைவு

கடந்த 2022ஆம் ஆண்டு கன்னடத்தில் ரிஷப்ஷெட்டி இயக்கி நடித்த 'காந்தாரா' திரைப்படம் பெரும் வெற்றிபெற்றது. அந்த வெற்றியை தொடர்ந்து 'காந்தாரா' திரைப்படத்தின் 2ஆம் பாகம் உருவாகி வருகிறது.

தற்போது 'காந்தாரா-2' திரைப்படத்தின் இறுதிகட்ட படப்பிடிப்பு பணிகள் முடிவடைந்துள்ளதாக படக்குழு வீடியோ வெளியிட்டு அறிவித்துள்ளது.

படத்தில் வேலைப்பார்த்த சிலரின் மரணங்கள் அடுத்தடுத்து நடந்தது. இது காந்தாரா திரைப்படத்தால் தான் இவ்வாறு நடக்கிறது என பேச்சுகள் திரைவட்டாரத்தில் பேசப்பட்டது.

இப்படத்தை ஹொம்பலே பிலிம்ஸ் நிறுவனம் தயாரிக்கிறது. படத்தில் ரிஷப் ஷெட்டியுடன் ஜெயராம் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். படத்தின் இசையை அஜேஷ் லோக்நாத் மேற்கொள்கிறார். திரைப்படம் வரும் ஒக்டோபர் 2 ஆம் திகதி வெளியாகிறது.

# 'கில்லர்'

நடிகர் மற்றும் இயக்குநரான எஸ்.ஜே.சூர்யா 'லவ் இன்சூரன்ஸ் கம்பெனி' மற்றும் 'சர்தார் 2' ஆகிய படங்களை கைவசம் வைத்துள்ளதுடன், இயக்குநராக கடைசியாக 'இசை' படத்தை 2015ஆம் ஆண்டு இயக்கியிருந்தார்.

இதன் பிறகு நடிப்பில் பிஸியான எஸ்.ஜே.சூர்யா தற்போது நீண்ட இடைவெளிக்குப் பிறகு 'கில்லர்' படம் மூலம் மீண்டும் இயக்கம் பக்கம் திரும்பியுள்ளார்.

இப்படம் குறித்து கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் ஒரு நிகழ்வில் பேசிய எஸ்.ஜே.சூர்யா, படம் நியூ 2 மாதிரியான ஒரு படமாக இருக்குமென கூறியிருந்தார்.

இப்படத்துக்காக ஒரு சொகுசு காரை ஜெர்மனியில் இருந்து இங்கு இறக்குமதி செய்தார். இப்படத்தை இயக்குவது மட்டுமல்லாமல் நடிக்கவும் செய்து பான் இந்தியா படமாக வெளியிட திட்டமிட்டுள்ளார்.

இப்படத்தில் அயோத்தி படம் மூலம் கவனம் ஈர்த்த ப்ரீத்தி அஸ்ரானி நடிக்கிறார். ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்கிறார். இந்த நிலையில் படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்டர்கள் அண்மையில் வெளியானது.




இரண்டு போஸ்டர்கள் வெளியாகியுள்ள நிலையில் ஒரு போஸ்டரில் ஸ்டைலிஷான கெட்டப்பில் கையில் துப்பாக்கியுடன் எஸ்.ஜே.சூர்யா நிற்கிறார். மற்றொரு போஸ்டரில் ப்ரீத்தி அஸ்ரானியை தோளில் தூக்கி வைத்துக் கொண்டு மற்றொரு கையில் துப்பாக்கியுடன் நிற்கிறார்.

படப்பிடிப்பு முழு வீச்சில் நடந்து வருவதுடன், விரைவில் மேலதிக தகவல்கள் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# மீண்டும் மீண்டும் கார் விபத்து

நடிகர் அஜித்குமார் குட் பேட் அக்லி படத்தை அடுத்து மீண்டும் ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் நடிகக்வுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மோகன்லால் முக்கிய கதாபாத்திரத்திலும் கே.ஜி.எஃப். நாயகி ஸ்ரீநிதி ஷெட்டி கதாநாயகியாகவும் நடிப்பதற்கான பேச்சு வார்த்தை நடந்து வருகின்றது.

இந்த நிலையில், சினிமாவை தாண்டி கார் ரேஸில் ஆர்வம் உள்ள அஜித் நீண்ட இடைவெளிக்குப் பிறகு கடந்த ஜனவரி முதல் கார் ரேஸில் அதிக தீவிரம் காட்டி வருகிறார்.

டுபாய், போர்த்துக்கல் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் நடக்கும் போட்டியில் தனது 'அஜித்குமார் ரேஸிங்' என்ற அணி மூலம் கலந்து கொண்டு வருகிறார்.

இந்த நிலையில் இதாலியில் நடைபெற்ற ஜிடி4 யுரோப்பியன் சீரிஸ் போட்டியில் கலந்து கொண்ட போது, இரண்டாவது சுற்றில் கார் ஓட்டிக்கொண்டிருந்த அஜித், விபத்தில் சிக்கினார்.

வளைவில் திரும்பும் போது நடுவில் பழுதாகி நின்று கொண்டிருந்த கார் மீது அஜித்தின் கார் மோதியது. இந்த விபத்தில் அஜித்துக்கு காயம் ஏதும் ஏற்படவில்லை.




# மீண்டும் நாயகி?

நடிகை சமந்தா டிரலாலா மூவிங் பிக்சர்ஸ் என்ற தயாரிப்பு நிறுவனத்தை தொடங்கி `சுபம்' என்ற திரைப்படத்தை தயாரித்தார். திரைப்படம் கடந்த மே 9 ஆம் திகதி வெளியாகி மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

திரைப்படம் ஓடிடியில் வெளியான பிறகு மக்கள் பலரால் இப்படம் ரசிக்கப்பட்டது. அப்படத்தில் சமந்தா ஒரு கேமியோ கதாப்பாத்திரம் நடித்தது குறிப்பிடத்தக்கது.

இந்தநிலையில் சமந்தா மீண்டும் 2 வருடங்களுக்கு பிறகு தெலுங்கு திரைப்படத்தில் கதாநாயகியாக நடிக்கவுள்ளார் என்ற தகவல் வெளியாகியுள்ளது.

இப்படத்தை ஓ பேபி என்ற ப்ளாக்பஸ்டர் திரைப்படத்தை இயக்கிய நந்தினி ரெட்டி இயக்கவுள்ளார். சமந்தா தொடர்ந்து ஹிந்தி படங்களிலும், வெப் தொடர்களிலும் நடித்து வருகிறார்.






# தங்கத் தேர் திருவிழா...

கொழும்பு-02, கொம்பனித்தெருவில் வீற்றிருந்து வேண்டுவோர்க்கு வேண்டுவன அருள்பாலித்துவரும் ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத அருள்மிகு சிவசுப்பிரமணியப்பெருமானின் வருடாந்த மஹோற்சவ தேர்த்திருவிழா, ஞாயிற்றுக்கிழமை (20) அன்று நடைபெற்றது. ஸ்ரீ ஆறுமுருகப்பெருமான் தங்கத்தேரில் வெளிவீதி வலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலித்தார்.
































# நல்லூர் கொடிச்சீலைக்கான காளாஞ்சி கையளிப்பு

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு, திங்கட்கிழமை(21) காலை இடம்பெற்றது.

வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தற்கால் நாட்டுதல் நடைபெற்று பாரம்பரிய முறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களிற்கான காளாஞ்சி மாட்டுவண்டியில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாச்சார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன.

ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா இம்மாதம் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(நிதர்ஷன் வினோத்)



காசா

காசாவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில்

# 115 பேர் பலி

காசாவில் ஞாயிற்றுக்கிழமை (20) அன்று இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 115 பேர் உயிரிழந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

காசா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் ஆயுதக் குழுவினர் கடந்த 2023ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்த தாக்குதலில் 1,139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும், இஸ்ரேலில் இருந்து 251 பேரை பணய கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் கடத்தி சென்றுள்ளது.

இதையடுத்து, ஹமாஸ் ஆயுதக் குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் காசா முனையில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது.

அதேவேளை, பணய கைதிகளில் பலரை ஒப்பந்த அடிப்படையிலும், இராணுவ நடவடிக்கை மூலமும் இஸ்ரேல் மீட்டுள்ளது.

தற்போதைய நிலைவரப்படி, ஹமாஸ் ஆயுதக்குழுவின் பிடியில் இன்னும் 50 பேர் பணய கைதிகளாக உள்ளனர்.

இதில் 25க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



அதேவேளை, பணய கைதிகளை மீட்கவும், ஹமாஸ் ஆயுதக்குழுவினரை முழுமையாக ஒழிக்கும் நோக்கிலும் காசா முனையில் இஸ்ரேல் தொடர்ந்து தரைவழி, வான்வழி தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்நிலையில், காசா முனையில் ஞாயிற்றுக்கிழமை (20) இஸேஸ்ரல் தரைவழி, வான்வழி தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 115 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன் மூலம் இஸ்ரேல், ஹமாஸ் இடையேயான போரில் காசாவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 58 ஆயிரத்து 895 ஆக அதிகரித்துள்ளது.

டோக்கியோ

## ஜப்பான் தேர்தலில் ஆளும் கட்சிக்கு பின்னடைவு



ஜப்பானில் நடந்த மேலவை (செனட் சபை) தேர்தலில் ஆளும்கட்சிக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இதனால், பிரதமர் இஷிபாவுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

ஜப்பானில் லிபரல் டெமாக்ரடிக் கட்சியும், கோமெயிட்டோ கூட்டணியும் ஆட்சியமைத்து வருகிறது. இந்த நிலையில், பாராளுமன்றத்தில் மேல்சபைக்கு ஞாயிற்றுக்கிழமை(20) அன்று தேர்தல் நடைபெற்றுள்ளது.


மேலவையின் 248 இடங்களில் பாதி இடங்களுக்கான தேர்தல் நடந்தது. ஆளும் கட்சிகளுக்கு மேலவையில் ஏற்கனவே 75 இடங்கள் உள்ள நிலையில், இன்னும் 50 இடங்களை ஆளும் கட்சி கைப்பற்ற வேண்டும்.

இந்த நிலையில், மேலவை தேர்தலில் பிரதமர் ஷிகெரு இஷிபாவின் கட்சிக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. ஏற்கெனவே, கீழவை தேர்தலிலும் பெரும்பான்னமையை இழந்துள்ளது.

இதன்மூலம், 70 ஆண்டுகால வரலாற்றில் முதன்முறையாக லிபரல் டெமாக்ரடிக் கட்சி எந்த அவைகளிலும் பெரும்பான்மையை பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மாஸ்கோ

## உக்ரைனுடன் அமைதி பேச்சுவார்த்தை தயார்



உக்ரைனுடன் அமைதி பேச்சுவார்த்தைக்கு நாங்கள் எப்போதும் தயார் என ரஷ்யா தெரிவித்துள்ளது.

கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வரும் இந்த போரில் உக்ரைனுக்கு ஆதரவாக அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகள் உதவி வருகின்றன.

அமெரிக்காவில் புதிய ஜனாதிபதியான தேர்தலில் ட்ரம்ப், ரஷியா-உக்ரைன் இடையேயான போரை நிறுத்துவதாக அறிவித்தார். அதன்படி, ஜனாதிபதியாக பதவியேற்றதை தொடர்ந்து உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கியை வெள்ளை மாளிகைக்கு வரவழைத்து நேரலையில் உரையாடி அவர் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார். மேலும், போரை உடனடியாக கைவிடுமாறு எச்சரித்தார். ரஷ்ய ஜனாதிபதி புட்டினை தொலைபேசி வாயிலாக தொடர்பு கொண்டும் போர் நிறுத்தத்திற்கு வேண்டுகோள் விடுத்தார். இதனிடையே ரஷ்யாவின் அதிகாரப்பூர்வ அரசு தலைமையிடமான கிரெம்ளின் மாளிகையின் செய்தி தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் பத்திரிகையாளர்களை சந்திந்தார்.

அப்போது அவர் உக்ரைனுடன் புதிய அமைதி பேச்சுவார்த்தைக்கு தயார் என அறிவித்தார்.

புதுடெல்லி

“இந்தியாவின் இராணுவ வலிமையை

## உலக நாடுகளே வியந்தன”

‘ஆபரேஷன் சிந்தூர்’ நடவடிக்கை மூலம், நமது நாட்டின் இராணுவ வலிமையைக் கண்டு உலக நாடுகளே வியந்தன என்று இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இந்திய பாராளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் திங்கட்கிழமை (21)அன்று ஆரம்பமானது.

மழைக்கால கூட்டத் தொடரில் பங்கேற்பதற்காக சென்ற பிரதமர் மோடி செய்தியாளர்களிடம் கூறியதாவது,

ஆரோக்கியமான விவாதங்களுக்கு அனைவரும் ஒத்துழைப்பு தர வேண்டும். ‘ஆபரேஷன் சிந்தூர்’



நடவடிக்கையால் இந்தியாவின் இராணுவ பலத்தை உலகம் அறிந்தது. இராணுவ வலிமையை உலகமே கண்டு வியந்தது.

ஆபரேஷன் சிந்தூரின் இலக்குகள் 100 சதவீதம் வெற்றி அடைந்துள்ளது. பாதுகாப்பு படையினருக்கு அளித்த குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டன. பயங்கரவாதிகள் முகாம்கள் 22 நிமிடத்தில் அளிக்கப்பட்டன. பாராளுமன்ற கூட்டத்தொடர் பயனுள்ளதாக இருக்கும். மழைக்கால கூட்டத் தொடரில் சுமுகமான விவாதங்கள் நடத்த வேண்டும்.

மழைக்காலம் என்பது புதிய தொடக்கங்களுக்கான காலம். கடந்த 10 ஆண்டு சராசரி விட இந்த ஆண்டு மிக அதிகமான மழைப்பொழிவு உள்ளது. சர்வதேச விண்வெளி நிலையத்தில் இந்தியாவின் கொடி பறக்கிறது. இந்தியாவின் வெற்றி மற்றும் கவுரவத்தை கொண்டாட இதுவே சரியான தருணம் என்றும் கூறியுள்ளார்.

மும்பை

மும்பை ரயில் குண்டு வெடிப்பு;

## குற்றவாளிகள் 12 பேர் விடுதலை

மும்பை ரயில் குண்டுவெடிப்பு வழக்கில் குற்றவாளிகள் 12 பேருக்கு அளித்த தண்டனையை 19 ஆண்டுகளுக்கு பிறகு திங்கட்கிழமை (21) அன்று இரத்து செய்து மும்பை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 2006ஆம் ஆண்டு ஜூலை 11ஆம் திகதி மும்பையின் புறநகரில் உள்ள 7 ரயில்களில் வெடிகுண்டுகள் வெடித்தன. இதில் 188 பேர் கொல்லப்பட்டனர். 700க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில் பிரஷர் குக்கரில் வெடிகுண்டுகள் வைத்து வெடிக்கச் செய்தது தெரிய வந்தது.

இவ்வழக்கு தொடர்பாக 13 பேர் கைது செய்யப்பட்டனர். 9 ஆண்டுகளாக விசாரணை நடைபெற்று வந்தது. 192 பேர் சாட்சிகளாக சேர்க்கப்பட்டு, இவர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. குற்றம்சாட்டப்பட்ட 13 பேரில் 12 பேர் குற்றவாளிகள் என கோர்ட் தீர்ப்பளித்தது.

கடந்த 2015ஆம் ஆண்டு, இதில் 5 பேருக்கு மரண தண்டனையும், ஏழு பேருக்கு ஆயுள் தண்டனையும் விதித்தது.

இந்த தீர்ப்பிற்கு பிறகு, மஹாராஷ்டிரா அரசு குற்றவாளிகளின் மரண தண்டனை உறுதி செய்ய



கோரி, நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. அதே நேரத்தில், தண்டனையை எதிர்த்து நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து இருந்தனர். இந்த வழக்கு தொடர்பாக, நீதிமன்றத்தில் விசாரணை நடந்தது.

இந்நிலையில், திங்கட்கிழமை (21) 12 பேர் மீதான தண்டனையை ரத்து செய்து, மும்பை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. ‘அவர்களுக்கு எதிரான வழக்கை நிரூபிக்க அரசு தரப்பு முற்றிலும் தோல்வி அடைந்து விட்டது’என நீதிபதிகள் தீர்ப்பில் கூறியுள்ளனர்.

முதலாவது போட்டியில்

# மேற்கிந்தியத் தீவுகளை வென்ற அவுஸ்திரேலியா

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், ஜமைக்காவில் திங்கட்கிழமை (21) அன்று நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணித்தலைவர் மிற்செல் மார்ஷ், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென அறிவித்தார். அவுஸ்திரேலிய அணி சார்பாக மிற்செல் ஓவன் அறிமுகத்தை மேற்கொண்டார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், றொஸ்டன் சேஸின் 60 (32), அணித்தலைவர் ஷே ஹோப்பின் 55 (39), ஷிம்ரோன் ஹெட்மயரின் 38 (19) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் பென் டுவார்ஷுய்ஸ் 4-0-36-4, நாதன் எலிஸ் 4-0-31-1, அடம் ஸாம்பா 4-0-30-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 190 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, கமரன் கிறீனின் 51 (26), ஓவனின் 50 (27) ஓட்டங்களோடு 18.5 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை




இழந்த நிலையில், வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில் குடகேஷ் மோட்டி 4-0-29-2, ஜேஸன் ஹோல்டர் 4-0-32-2, அகீல் ஹொஸைன் 4-0-35-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக ஓவன் தெரிவானார்.

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது புதன்கிழமை (23) அதிகாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

## இலங்கையணியில் நிந்தவூர் அல்-அஷ்ரக் மாணவர்

■ எஸ்.அஷ்ரப்கான்

பஹ்ரேய்னில் நடைபெறவுள்ள மூன்றாவது ஆசிய இளைஞர் விளையாட்டு கபடி சம்பியன்ஷிப்பில் பங்கேற்பதற்கான இலங்கையணியின் இறுதி தேர்வில் நிந்தவூர் அல்-அஷ்ரக் தேசிய பாடசாலையைச் சேர்ந்த எஃப்.எம்.நியாஃப் ஸைனி, ஆர்.எம்.மில்ஹான் மஹி, எஸ்.எம்.சம்ரி ஆகிய மூவரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வீரர்களுக்கு பிரதான பயிற்றுவிப்பாளர் ஆசிரியர் எஸ்.எம்.இஸ்மத், உதவிப் பயிற்றுவிப்பாளரும் தேசிய கபடி அணியின்





முன்னாள் தலைவரும் விளையாட்டு பயிற்றுவிப்பாளருமான எம்.டி.அஸ்லம் சஜா ஆகியோர் விசேடமாக பயிற்சியளித்திருந்தனர்.

## அல்-ஹிலால் வி.க. 50ஆவது ஆண்டு பூர்த்தி

■ ஹஸ்பர் ஏ.எச்.

திருகோணமலை மாவட்ட குச்சவெளி பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட அல் - ஹிலால் விளையாட்டுக் கழகத்தின் ஐம்பதாவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு பொன் விழா நிகழ்வானது குச்சவெளி இளைஞர் சேவை மன்ற கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை (19) அன்று நடைபெற்றது.

1975ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட குறித்த விளையாட்டுக் கழகம் இற்றை வரை திறம்பட செயற்பட்டு வருகின்றது. குறித்த நிகழ்வுக்கு டியான் ஹார்ட்வெயார் உரிமையாளர் டி.சி.ஏ.பஸ்மி காசிம் அனுசரணை வழங்கியதுடன் எம்.ரினோ இணையனுசரணையை வழங்கியிருந்தார்.




முதலாவது போட்டியில்

## பாகிஸ்தானை வீழ்த்திய பங்களாதேஷ்

பாகிஸ்தானுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், மிர்ப்பூரில் ஞாயிற்றுக்கிழமை(20) அன்று நடைபெற்ற முதலாவது போட்டியில் பங்களாதேஷ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பங்களாதேஷ்

பாகிஸ்தான்: 110/10 (19.3 ஓவ.) (துடுப்பாட்டம்: பக்கர் ஸமன் 44 (34) ஓட்டங்கள். பந்துவீச்சு: தஸ்கின் அஹ்மட் 3/22 [3.3], முஸ்தபிசூர் ரஹ்மான் 2/6 [4], தன்ஸிம் ஹஸன் சகிப் 1/20 [4], ஷமிம் ஹொஸைன் 0/2 [1], ரிஷாட் ஹொஸைன் 0/19 [3])

பங்களாதேஷ்: 112/3 (15.3 ஓவ.) (துடுப்பாட்டம்: பர்வீஸ் ஹொஸைன் எமொன் ஆ.இ 56 (39), தௌஹிட் ஹிரிடோய்



36 (37) ஓட்டங்கள். பந்துவீச்சு: சல்மான் மிர்ஸா 2/23 [3.3], அப்பாஸ் அஃப்ரிடி 1/16 [2], அப்ரார் அஹ்மட் 0/20 [4])

போட்டியின் நாயகன்: பர்வீஸ் ஹொஸைன் எமொன்.

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது இன்று மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்டில்


## இந்தியாவின் ஆகாஷ் டீப்பும் இல்லை

இங்கிலாந்துக்கு எதிரான நான்காவது டெஸ்டில் அர்ஷ்டீப் சிங்கைத் தொடர்ந்து ஆகாஷ் டீப்பும் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இங்கிலாந்துக்கெதிரான இறுதி இரண்டு டெஸ்ட் போட்டிகளுக்கான இந்தியக் குழாமில் வேகப்பந்துவீச்சாளர் அன்ஷுல் கம்போஜ்ஜை சேர்க்கத் தேர்வாளர்கள் தீர்மானித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அர்ஷ்டீப்புக்கு கையில் காயமேற்பட்டுள்ள நிலையில் டீப்புக்கு அடிவயிற்றுப் பகுதியில் உபாதை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை முழங்கால் காயமொன்று ஏற்பட்டதையடுத்து எஞ்சியுள்ள இங்கிலாந்துச் சுற்றுப்பயணத்திலிருந்து நிதிஷ் குமார் ரெட்டி விலகவுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை 22, ஜூலை 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.